மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மரவள்ளிக் கிழங்குக்குத் தற்பொழுது நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே, இந்தக் கிழங்கை இதர மாவட்டங்களிலும் பயிரிட அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறதா? அப்படியென்றால் எந்தெந்த மாவட்டங்களில் பயிரிட தற்பொழுது திட்டமிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவை மாவட்டத்தைப் பற்றி 1973–74-ம் ஆண்டுக்கான விவரங்களைக் கேட்டிருந்தார்கள். 500 ஏக்கர் வரை விரிவாகப் பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். 1974–75-ல் கோவை மாவட்டத்திலேயே 4,000 ஏக்கராக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 4,000 ஏக்கரில் இந்தப் பயிர் விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ்: கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் மரவள்ளிக்கிழங்கு தீவிர சாகுபடித் திட்டம் அமலில் இருந்தது. அதிகாரிகள் தவறு செய்த காரணத்தால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. தற்போது அந்த வழக்கு தள்ளுபடியாகியிருக்கிறது. கிள்ளியூர் பகுதியில் நெல் சாகுபடியும் அதிகமாக இல்லை, ரப்பர் பிளாண்டேஷனும் அதிகமாக இல்லை. ஆகவே, மறுபடியும் மரவள்ளிக்கிழங்கு விவசாயத்தை ஊக்குவிக்க தீவிர சாகுபடித் திட்டம் அமல் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கு பற்றிச் சொன்னார்கள். தள்ளுபடி செய்யப்பட்டது என்றார்கள். வழக்கில் சம்பந்தப்பட்டவர்களில் அந்த விதைப்பண்ணையின் மானேஜருக்கு 4 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது; அதைப் போல் உதவியாளராக இருந்தவருக்கு ஓராண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. 1969-ம் ஆண்டுக்குப் பிறகு இந்தத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலே செயல்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திலே தீவிரத் திட்டம் வேண்டுமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர், வளவனூர் பகுதியில் எம். 4 என்ற கிழங்கு மிக நன்றாக வளருகிறது. அங்கிருந்து அந்த விதைகள்

1975 ஏப்ரல் 7] [மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்]

மற்ற மாவட்டங்களுக்குப் பரப்பப்பட்டு வருகிறது. அங்கு மேற்கொண்டு உதவி தேவையா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்ருக இருக்கிறது. அங்கு வங்கிக் கடன் கொடுக்கப்பட்டிருக் கிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : ஏழிலேக் கிழங்குக்கு 10 மாதம் தண்ணீர் பாய்ச்சும் நிலைமை இருக்கிறது. இராமநாத புரம் மாவட்டத்தில் இதைப் பயிரிட வேண்டுமென்று வற்புறுத்துவது இந்த டிரவுட் கண்டிஷனில் சரியான முறை என்று சொல்ல முடியாது. இந்த மாதிரி நிலைமைகளை உத்தேசித்து 5 மாதம் 4 மாதம் குறுகிய காலப் பயிர்களைப் பயிரிட வழிவகை செய்து ஏழிலைக் கிழங்கு கட்டாயமாகப் பயிரிட வேண்டுமென்பது தேவையில்லை என்று கூற பரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : ஏழிலைக் கிழங்கு என்பதும், வள்ளிக் கிழங்கு என்பதும், ஜவ்வரிசிக் கிழங்கு என்பதும், குச்சிக் கிழங்கு என்பதும் ஒரே கிழங்குதான். பத்து மாதங்கள் என்று சொல்லுவது முன்னல் இருந்த நிலைமை. ஆனல் தற்போது ஆராய்ச்சி மூலமாகக் கண்டு பிடிக்கப்பட்ட கிழங்கு எச். 165 என்பதெல்லாம் 8 மாதத்திலேயே வெட்டியாக வேண்டும். தண்ணீர் அதிகமாகக் கொள்ளுகிறது என்பதும் தவறு. எட்டு மாதப் பயிராக இருந்தாலும் இரண்டு மாதம் அல்லது 2½ மாதம் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல், மழையே பெய்யாமல் இருந்தாலும் இது வளரும். It is a drought resistant plant. இது பிரேசிலில் இருந்து கொண்டு வரப்பட்டு சிறப்பாக விளைச்சல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு 15 டன் அல்லது 20 டன் கிடைக்கிறது. இரட்டைச் செடிகளை ஒன்ருக வைத்தால் ஒரு ஏக்கருக்கு 30 டன் என்ற அளவுக்குத் தாராளமாக விளைவதால்தான் இதைப் பயிரிடலாம் என்று கூறப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கிள்ளியூர் பகுதியில் பாக்கேஜ் திட்டம் உருவாகி இருந்தது. அந்தத் திட்டத்தினல் முழு அளவு மக்கள் பயன்பெறவில்லை. அதிகாரிகள் தவறு செய்த காரணத்தால் நிறுத்தப்பட்டது. இப்போது பட்டணங்காலில் இருந்து போதிய அளவு நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. பல்வேறு பகுதியில் தாராளமாக கழிவு பூமி இருக்கும் பகுதியில் இதைப் பயிரிட சிறப்புத் திட்டம் மறுமுறை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?